# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 03.08.2026

## முன்னிலை

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 9386/SCIC/2024**

திரு.மு.சுரேஷ் - மேல்முறையீட்டாளர்
No.320, New Law Chamber
2nd Floor, High Court of Madras
சென்னை - 600 104.
Phone: 9443759384

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
அரசு சார்புச் செயலாளர்
உள் துறை, தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **30.01.2024** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 06.03.2024 |
| 3. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 04.07.2024 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 30/01/2024 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ உள்துறை செயலாளர் அலுவலகம், சென்னை அவர்களுக்கு அனுப்பி, அதில் “My sanction letter dated 22/12/2023 - regarding - What are the action taken on my sanction letter may furnished the details.” என்பன போன்று 4 (நான்கு) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (03/08/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு.மு.சுரேஷ் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி.கவிதா, பிரிவு அலுவலர், உள்துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்கள் ஆஜராகி, மனுதாரருக்கு 02/02/2024 தேதியிட்டு பதில் அனுப்பியுள்ளதாகவும், அதில் மனுதாரரின் முந்தைய 22/12/2023 தேதியிட்ட சாதாரண மனுவினை, உரிய நடவடிக்கை எடுக்க

அறிவுறுத்தி, காவல்துறை தலைமை இயக்குநர், சென்னை-4 அவர்களுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் மேற்சொன்ன 22/12/2023 அம்மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விவரத்தையே, மனுதாரர், தனது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழான 30/01/2024 தேதியிட்ட மனுவின் வாயிலாகக் கோரியுள்ளார் எனத் தெரிவித்தார். மேல்முறையீட்டு அலுவலர் / சார்புச் செயலாளர், உள் (குடியுரிமை) துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்கள் 22/03/2024 தேதியிட்ட கடிதம் வாயிலாக பதில் அனுப்பியுள்ளதாகவும், மேலும் பொதுத் தகவல் அலுவலர் / காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகம் அவர்கள் 16/09/2025 தேதியிட்ட கடிதம் வாயிலாக மனுதாரருக்கு பதில் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்து, அதன் நகலினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். **ஆணையத்தின் அழைப்பாணை அனுப்பப்பட்டு, தனது வாதுரையினை பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும், மனுதாரர் இன்றைய விசாரணையில் ஆஜராகத் தவறியுள்ளார். எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**வழக்கு எண். SA 9386/SCIC/2024**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர் /
அரசு சார்புச் செயலாளர்
உள் துறை, தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

**மேல்முறையீட்டாளர்**

திரு.மு.சுரேஷ்
No.320, New Law Chamber
2nd Floor, High Court of Madras
சென்னை - 600 104.
Phone: 9443759384

RG/Sr.PC